இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 07 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 31 – வெள்ளிக்கிழமை 16 ஆகஸ்டு 2024 – திருச்சி ★ ★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 07 : Thiruvalluvar Year - 2055 - Aadi 31 - Friday 16 August 2024 - Trichy ★ ★ 12 Pages ₹ 5.00



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (15.8.2024), சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் சுதந்திரத் திருநாளையொட்டி நடைபெற்ற காவல்துறையின் அணிவகுப்பினை பார்வையிட்டார்.



சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2024), சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் தேசியக் கொடியேற்று விழாவிற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, முப்படைகளின் உயர் அதிகாரிகள், தமிழ்நாடு காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா அறிமுகப்படுத்தி வைத்தார்.

## 78-வது சுதந்திர தின விழாவையொட்டி - நேற்று

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியேற்றினார் !

## பல விருதுகள் வழங்கி சுதந்திர தின உரை நிகழ்த்தினார் முதல்வர் !

**சென்னை, ஆக. 16 -**

**நாட்டின் 78-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று (ஆகஸ்ட் 15) கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, விருதுகளை வழங்கி, சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.**

குடியரசுத் தினத்தன்று மாநில ஆளுநர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைப்பதைப் போன்று சுதந்திரத்தினத்தன்று அந்தந்த மாநிலங்களில் அம்மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் உரிமையைப் பெற்றுத் தந்தார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

இந்திய நாட்டின் 78-வது சுதந்திர தினம் நேற்று (ஆகஸ்ட் 15ஆம்) நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைநகர் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள கொடி மேடையில் நேற்று (15.08.2024) காலை 9 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின விழாவில் சிறந்த சமூக சேவகர், சிறந்த தொண்டு உள்ளிட்ட பல விருதுகள் வழங்கப்படும். சமூக சேவகருக்கு ரூ.50 ஆயிரம் ரொக்கமும், தொண்டு நிறுவனத்துக்கு ரூ. 1 லட்சம் ரொக்கமும், சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

**தகைசால் தமிழர் விருது!**

மேலும் 2021ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு தகைசால் தமிழ் விருதை வழங்கி வருகிறது. அதன் படி இந்த ஆண்டு தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் - இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களுக்கு தகைசால் தமிழர் விருதினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த ஆண்டு வழங்கி சிறப்பித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2024) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

இதைத் தொடர்ந்து ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது, தைரியம் மற்றும் துணிச்சலுக்கான கல்பனா சாவ்லா விருது, சிறப்பாகச் செயல்படும் 3 அரசுத் துறைகளுக்கான முதலமைச்சர் நல்லாட்சி விருது, மருத்துவர்கள், நிறுவனங்கள், சமூகப் பணியாளர்கள், ஊனமுற்றோர், சமூக நலன் மற்றும் சிறப்புமிக்க சேவைக்கான கூட்டுறவு வங்கி விருதுகள், சிறந்த மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகரங்களுக்கான விருதுகளையும் இவ்விழாவில் முதல்வர் அவர்கள் வழங்கியதுடன் மேலும், குழந்தைகளுக்கு முதல்வர் அவர்கள் இனிப்புகளையும் வழங்கினார்.

**வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிப்பு!**

சுதந்திர தினத்தையொட்டி, செயின்ட் ஜார்ஜ் கோட்டை மற்றும் தலைமைச் செயலக கட்டிடம் ஆகியவை வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கோட்டை அரண்களுக்கு முன்பாக மூன்று பிரமாண்ட மேடைகள் கட்டப்பட்டு நிகழ்ச்சியைக் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதுதவிர பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

**9000 போலீசார் பாதுகாப்பு!**

தமிழகத்தைப் பொறுத்தவரை விழா நடக்கும் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையைச் சுற்றி 5 நிலை பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டிருந்தது. இதுதவிர சென்னையில் 9000 போலீசார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். சென்னை விமான நிலையத்தில் 7 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மேலும், சென்ட்ரல், எழும்பூர் உள்ளிட்ட சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள அனைத்து ரயில் நிலையங்கள் மற்றும் விமான நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

சுதந்திர தின விழா நிகழ்ச்சி நடைபெற்ற இடம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

நாடு முழுவதும் 78வது சுதந்திர தின விழா நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. சென்னை கோட்டைகொத்தளத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, விருதுகளை வழங்கினார். சுதந்திர தினவிழா நிகழ்ச்சிகளை பொதுமக்கள் ஏராளமானோர் கண்டு களித்தனர்.

---

## 2024 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு

# 15 காவல் துறை அதிகாரிகளுக்கு சிறப்புப் பதக்கங்கள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

*சென்னை, ஆக.16-*

புலன் விசாரணைப் பணியில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் கீழ் கண்ட 10 காவல் துறை அதிகாரிகள் 2024ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதலமைச்சரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப்பணிப் பதக்கங்கள் வழங்கப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:

திருமதி.கி.புனிதா, காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் காவல் நிலையம், வேலூர் மாவட்டம்

து. வினோத்குமார், காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் பிரிவு, மத்திய குற்றப்பிரிவு, சென்னை.

செல்வி.ச.சௌமியா, காவல் துணை கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, கடலூர் மாவட்டம்.

திருமதி.ஐ.சொர்ணவள்ளி, காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் காவல் நிலையம், திருப்பூர் மாநகரம்.

திருமதி. நா. பார்வதி, காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

திருமதி.பெ.ராதா, காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, திருப்பூர்.

செ.புகழேந்தி கணேஷ், காவல் துணை கண்காணிப்பாளர், செங்கல்பட்டு உட்கோட்டம்,

செங்கல்பட்டு மாவட்டம்.

திருமதி. இரா.தெய்வராணி, காவல் ஆய்வாளர், பெருந்துறை காவல் வட்டம், ஈரோடு மாவட்டம்.

திருமதி. ஆ. அன்பரசி, காவல் ஆய்வாளர், பொன்னை காவல் நிலையம், வேலூர் மாவட்டம்.

நா.சுரேஷ், துணை காவல் கண்காணிப்பாளர், ஊரக உட்கோட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

இதேபோன்று பொதுமக்களின் சேவையில் தன்னலம் கருதாமல் சிறப்பாக செயல்பட்டு சீரிய பணியாற்றிய கீழ்கண்ட 5 காவல்துறை அதிகாரிகளுக்கு 2024ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர்களது பணியைப் பாராட்டி சிறந்த பொதுச் சேவைக்கான தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்படும்:

தா.ச. அன்பு.

காவல்துறை தலைவர்,

குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை, சென்னை.

இ.கார்த்திக்,

காவல் கண்காணிப்பாளர் I,

தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை, சென்னை.

சி.ர.பூபதிராஜன்,

துணைக் காவல் கண்காணிப்பாளர்,

தனிப்பிரிவு குற்றப்பபுலனாய்வுத் துறை, சேலம் சரகம்.

க.சீனிவாசன்,

காவல் ஆய்வாளர் (தொ.நு.),

காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை.

பு.வ. முபைதுல்லாஹ்,

காவல் உதவி ஆய்வாளர்,

உள்வட்ட பாதுகாப்பு பிரிவு, அயல்பணி திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவு பிரிவு, தலைமையகம், சென்னை.

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப்பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படும். மேற்கண்ட விருதுகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.